

0776906182



# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




T.P- 0774357193


## இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ உட்பட நால்வர் கனடாவிற்குள் நுழைய தடை



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த ராஜபக்ஷ உட்பட நான்கு இலங்கையர்களுக்கு கனடா தடை விதித்துள்ளது. இலங்கையின் இராணுவப் படைப் பிரிவின் சுனில் ரத்நாயக்க மற்றும் லெப்டினன்ட் கமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி ஆகியோரே மற்றைய இருவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும் யுத்தக் குற்றங்களையும் கனடா அரசானது வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழ் மக்களுக்கான நீதி தொடர்பில் கனேடிய அரசு அண்மைக்காலமாக ஐ.நாவிலும் குரல் கொடுத்து வருகிறது. இலங்கை அரசின் பொறுப்புக்கூறல் தொடர்பில் அதிருப்தியடைந்துள்ள கனடா. இலங்கையில் உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் ஆட்சியிலிருந்த மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ இருவரையும் மனித உரிமைகளை மீறியதாகவும் அவர்கள் பொறுப்புக்கூறல் விடயத்திலிருந்து தப்பியிருப்பதாகவும் அடையாளப்படுத்தியே தமது நாட்டுக்குள் வருவதற்கான தடைகளை விதித்துள்ளது.

இந்த நால்வரும் கனடாவுடன் வணிக உறவுகளில் ஈடுபடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களுக்கு கனடாவில் சொத்துக்கள் இருந்தால் அவை பறிமுதல் செய்யப்படும் எனவும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சினால் அறிக்கை ஒன்றின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச ஊடகங்களும் இந்த விடயத்தினை சுட்டிக்காட்டி செய்திகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கனேடிய அரசின் இந்தத் தடை விடயமானது சர்வதேச அளவில் இலங்கையின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் விடயமாகவே பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே பொருளாதார ரீதியாக பாரிய பின்னடைவைக் கண்டிருக்கும் இலங்கையானது. மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள். பொறுப்புக்கூறல் போன்ற விடயங்களில் சர்வதேச ரீதியாக மேலும் சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ளது.

## இலங்கை உட்பட்ட பல நாடுகளில் வறுமை நிலை அதிகரிப்பு – உலக வங்கி






இலங்கை உட்பட பல நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அந்த நாடுகளில் வறுமை நிலை அதிகரித்துள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கி வெளியிட்டுள்ள 'Global Economic Prospects 2023' என்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வறுமையால் பல குடும்பங்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுக்கான தமது செலவினங்களைக் குறைத்திருப்பதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், 2022 இல் இலங்கையின் உற்பத்தி 9.2% குறைவடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, இலங்கைக்கான அந்நிய செலாவணி வரத்து குறைவடைந்துள்ளதால், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் இறக்குமதி தடைபட்டுள்ளதுடன், வெளிநாட்டுக் கடனை செலுத்துவதும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹெரோயின் போதைப்பொருளை பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்தவர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஹெரோயின் போதைப்பொருளை நீண்ட காலமாக பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை கடற்கரை வீதி பகுதி மக்பூலியா சந்திக்கருகில் சந்தேகத்திற்கிடமாக நபர் நடமாடுவது தொடர்பில் இரவு விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் ஒன்று கிடைத்தமைக்கமைய இச்சோதனை நடவடிக்கையை கல்முனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டனர்.

இதன் போது பாடசாலை மாணவர்களுக்கு ஹெரோயின் போதைப்பொருளை சூட்சுமமாக விற்பனை செய்த 22 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் வசம் இருந்து 1 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் விசேட அதிரடிப்படையினரால் மீட்டுள்ளது.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இச்சோதனை நடவடிக்கை விசேட அதிரடிப் படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.டி.டி நெத்தசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி.வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம்.டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே.நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் கண்டபிள்களான அமரசேகர (67810) பிரசன்ன (90669) நிமேஸ் (90699) ஜெயவர்த்தன (94155) சாரதி ஜெயரட்ண (19786) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்று பொருட்கள் யாவும் பெரிய நீலாவணை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன் விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.








## இதுவரையில் 08 அரசியல் கட்சிகள், 11 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம்

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக நேற்று (10) பிற்பகல் நிலவரப்படி 08 அரசியல் கட்சிகளும் 11 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன. அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான கட்டுப்பணத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நேற்று வைப்பிலிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் உள்ள நீர்கொழும்பு மாநகர சபைக்கான கட்டுப்பணத்தை ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி வைப்பிலிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி உள்ளூராட்சி மன்றம் தவிர்ந்த ஏனைய 11 உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தை இலங்கை தமிழ் அரசுக்கட்சி கட்சி நேற்று வைப்பிலிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. புத்தளம் மாவட்டத்தின் கல்பிட்டி பிரதேச சபைக்கான கட்டுப்பணத்தை ஐக்கிய காங்கிரஸ் கட்சி நேற்று வைப்பிலிட்டுள்ளது.

மேலும், குருநாகல் மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப்பணத்தையும் ஐக்கிய மக்கள் சக்தி நேற்றைய தினம் வைப்பிலிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, 11 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 11 சுயேட்சைக் குழுக்கள் நேற்று கட்டுப்பணத்தை வைப்பிலிட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

# 67 ஓட்டங்களால் இலங்கையை வீழ்த்திய இந்திய அணி



இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று இடம்பெற்றது. போட்டியின் நாணய சுழற்சியை வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச தீர்மானித்தது.


அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்து 373 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பில் விராட் கோலி 113 ஓட்டங்களையும் அணித் தலைவர் ரோஹித் சர்மா 83 ஓட்டங்களையும் சுப்மன் கில் 70 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் இலங்கை அணி சார்ப்பில் கசுன் ராஜித 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

அதனடிப்படையில் இலங்கை அணிக்கு 374 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 306 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

இலங்கை அணி சார்ப்பில் இறுதி வரை போராடிய அணித் தலைவர் தசுன் சானக ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களையும் பெத்தும் நிஸ்ஸங்க 72 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் உம்ரான் மலிக் 3 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். அதனடிப்படையில் 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

## 83வது பிறந்தநாளைக் கொண்டாடிய கே.ஜே



இந்திய இசை உலகில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக தனது குரலால் ரசிகர்களை வசீகரித்து வரும் கர்நாடக இசைக் கலைஞரும், பின்னணி பாடகருமான கே.ஜே. யேசுதாஸ், செவ்வாய்க்கிழமை தனது 83 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

திரையுலகைச் சேர்ந்த பலரும் அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இசை ரசிகர்களால் 'தாஸேட்டன்'என அன்போடு அழைக்கப்படும் யேசுதாஸ், கேரளத்தின் கொச்சியில் 1940 ஆண்டு பிறந்தார். 1961 ஆம் ஆண்டு, 'ஜாதி பேதம் மத துவேஷம்' என்னும் பிரபல மலையாளப் பாடல் மூலம் இசை உலகுக்கு அறிமுகமானார்.

பின்னர், 1962 ஆம் ஆண்டு மலையாளத் திரைப்படம் 'கால்பாடுகள்' மூலம்திரையுலகில் பின்னணிப்பாடகரான அவர் தொடர்ந்து தமிழ், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழி திரைப்படங்களிலும் பாடத் தொடங்கினார். மலையாளம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், வங்காளி மற்றும் ஒடியா உள்ளிட்ட இந்திய மொழிகளிலும், அரபி, ஆங்கிலம், லத்தீன் மற்றும் ரஷியன் உள்ளிட்ட அயல் நாட்டு மொழிகளிலும் 25,000 க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடி சாதனை படைத்துள்ளார்.

'கான கந்தர்வன்' என்று புகழப்படும் யேசுதாஸ் திரைப்படங்களில் பாடிய பாடல்களுக்காக 8 தேசிய விருதுகளும், கேரள அரசின் 25 விருதுகளும், தமிழ்நாட்டின் 5 மாநிலத் திரைப்பட விருதுகளும், ஆந்திரத்தின் 4 நந்தி விருதுகளும் பெற்றுள்ளார்.

கொச்சியிலுள்ள யேசுதாஸ் இசைப்பள்ளி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிறந்தநாள் விழாவில் மலையாள மூத்த நடிகர் மம்மூட்டி, சித்திக், மனோஜ் கே. ஜெயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அவர் தற்போது அமெரிக்காவில் உள்ளதால், காணொலி வழியாக பிறந்த நாள் நிகழ்ச்சியில் பங்கேற்று, பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

மலையாள நடிகர் மோகன் லால், பின்னணிப் பாடகி சித்ரா, கேரள எதிர்க்கட்சித் தலைவர் வி.டி.சதீசன் உள்ளிட்டோரும் சமூக வலைதளங்களில் யேசுதாஸுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

பிறந்தநாளை முன்னிட்டு கர்நாடக மாநிலம் உடுப்பியில் உள்ள மூகாம்பிகை கோயிலில் அவரது குடும்பத்தினர் சார்பில் சிறப்பு பூஜைக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு பிறந்த நாளின்போதும் குடும்பத்தினருடன் மூகாம்பிகை கோயில் சென்று பூஜை செய்து வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகில் வேகமாகப் பரவிவரும் பறவைக் காய்ச்சல்

பறவை காய்ச்சல் பாதிப்பு காரணமாக இந்தியாவில் இருந்து முட்டைகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், முட்டை ஏற்றுமதியில் ஈடுபடும் பிரதான நாடுகளிலும் பறவை காய்ச்சல் பரவிவருவதை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் முட்டைக்கான தட்டுப்பாடு காரணமாக, இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும், இந்தியாவின் சில மாநிலங்களில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் காரணமாக, அங்கிருந்து முட்டைகளை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கு கால்நடை சுகாதாரத் திணைக்களம் நேற்று அனுமதி வழங்க மறுத்திருந்தது.

அத்துடன் பறவைக்காய்ச்சல் இல்லாத நாடுகளில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் முட்டை ஏற்றுமதியில் ஈடுபடும் பிரதான நாடுகளில் நெதர்லாந்து, துருக்கி, போலந்து, அமெரிக்கா, மலேசியா, ஜேர்மனி, சீனா, ஸ்பெயின், பெல்ஜியம் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முதன்மை வகிக்கின்றன. இந்த பட்டியலில், இந்தியா 22 ஆவது இடத்தில் உள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறான சூழலில் நாட்டிற்கு முட்டையை இறக்குமதி செய்யும், மற்றுமொரு நாட்டை கண்டறிவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## டிசம்பர் மாத சிறந்த கிரிக்கெட் வீரராக ஹாரி புரூக் தெரிவு



ஐசிசி ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயல்படும் வீரர், வீராங்கனைகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு விருது வழங்கி வருகிறது. இந்நிலையில், டிசம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை ஐசிசி அறிவித்தது.

அதன்படி டிசம்பர் மாதத்திற்கான சிறந்த வீரர் விருதை இங்கிலாந்தை சேர்ந்த அதிரடி ஆட்டக்காரர் ஹாரி புரூக்குக்கு வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நடைபெற்ற டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3 – 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. அந்த தொடரில் ஹாரி புரூக் தனது அபாரமான திறமையை வெளிப்படுத்தி 3 சதம் மற்றும் 1 அரைசதம் குவித்து அசத்தினார். 2023 ஆம் ஆண்டுக்கான ஐபிஎல் ஏலத்தில் ஹாரி புரூக் ஐதராபாத் அணியால் 13.25 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

டிசம்பர் மாதத்திற்கான சிறந்த வீராங்கனை விருதை அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே கார்ட்னர் கைப்பற்றி உள்ளார்.

## 95ஆவது ஒஸ்கர் பட்டியலில் 10 இந்தியப் படங்கள்

95 ஆவது ஒஸ்கர் விழா மார்ச் 12 ஆம் திகதி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெறவுள்ளது. 10 பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளன. அந்த விழாவுக்காக இந்தியா சார்பில் குஜராத்தி மொழித் திரைப்படமான 'செல்லோ ஷோ' அதிகாரபூர்வமாகப் பரிந்துரைக்கப்பட்டது.

இந்நிலையில், ஒஸ்கருக்கான ஒட்டுமொத்த பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் மொத்தம் 301 திரைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தியாவில் இருந்து செல்லோ ஷோ, ஆர் ஆர் ஆர், காந்தாரா, கங்குபாய் கதியாவாடி, தி காஷ்மீர் ஃபைல்ஸ், இரவின் நிழல், ராக்கெட்ரி: தி நம்பி எஃபெக்ட், மே வசந்த்ராவ், துஜியா ஸாட்டி காஹி ஹி, விக்ராந்த் ரோனா ஆகிய படங்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும், ஒட்டுமொத்த பட்டியலில் இடம் பெற்றாலேயே அவை விருதுக்கான அடுத்தகட்ட பரிந்துரைப் பட்டியலில் இடம்பெறும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஒஸ்கர் விருதுக்கான தேர்வுப் பட்டியல் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. சிறந்த சர்வதேச திரைப்படத்துக்கான தேர்வுப் பட்டியலில் 'செல்லோ ஷோ' இடம்பெற்றுள்ளது. ஆர்ஆர்ஆர் திரைப்படத்தில் இடம்பெற்ற 'நாட்டு நாட்டு' பாடலானது சிறந்த பாடலுக்கான தேர்வுப் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

சிறந்த ஆவணப் படத்துக்கான தேர்வுப் பட்டியலில் 'ஆல் தட் பிரீத்ஸ்', சிறந்த ஆவண குறும்படத்துக்கான பட்டியலில் தமிழில் எடுக்கப்பட்ட 'தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்' ஆகியவை இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் ஒஸ்கர் விருதுக்கான 5 சிறந்த படைப்புகள் அடங்கிய பரிந்துரைப் பட்டியல் வரும் 24 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. அனைத்துப் பிரிவுகளுக்குமான விருதுகள் அறிவிப்பு லொஸ் ஏஞ்சலீஸில் மார்ச் மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் விழாவில் தெரிய வரும்.